## 83. மூன்று காதல்

### ஸரஸ்வதி காதல்

ராகம்: ஸரஸ்வதி மனோஹரி தாளம்: திஸ்ர ஏகம்

1. பிள்ளைப் பிராயத்திலே — அவள்
 பெண்மையைக் கண்டு மயங்கிவிட்டே னங்கு
பள்ளிப் படிப்பினிலே — மதி
 பற்றிட வில்லை எனிலும் தனிப்பட
வெள்ளை மலரணைமேல் — அவள்
 வீணையும் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதும் — கண்டென்
 வெள்ளை மனது பறிகொடுத்தே னம்மா!

2. ஆடி வருகையிலே — அவள்
 அங்கொரு வீதி முனையில் நிற்பாள் கையில்
ஏடு தரித்திருப்பாள் — அதில்
 இங்கிதமாகப் பதம் படிப்பாள் அதை
நாடி அருகணைந்தால் — பல
 ஞானங்கள் சொல்லி இனிமை செய்வாள் இன்று
கூடி மகிழ்வம் என்றால் — விழிக்
 கோணத்திலே நகை காட்டிச் செல்வா ளம்மா!

3. ஆற்றங் கரைதனிலே — தனி-
 யானதொர் மண்டப மீதினிலே தென்றல்
காற்றை நுகர்ந்திருந்தேன் — அங்கு
 கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாளதை
ஏற்று மனமகிழ்ந்தே — அடி
 என்னோ டிணங்கி மணம் புரிவாய் என்று
போற்றிய போதினிலே — இளம்
 புன்னகை பூத்து மறைந்துவிட்டா ளம்மா!

4. சித்தம் தளர்ந்ததுண்டோ? — கலைத்
 தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்ததுபோல் — பகற்
 பேச்சும் இரவிற் கனவும் அவளிடை
வைத்த நினைவையல்லால் — பிற
 வாஞ்சை யுண்டோ? வயதங்ஙனமே இரு-
பத்திரண்டா மளவும் — வெள்ளைப்
 பண்மகள் காதலைப் பற்றி நின்றே னம்மா!

## லக்ஷ்மி காதல்

ராகம்: ஸ்ரீராகம்   தாளம்: திஸ்ர ஏகம்

5. இந்த நிலையினிலே — அங்கொர்
இன்பப் பொழிலி னிடையினில் வேறொரு
சுந்தரி வந்துநின்றாள் — அவள்
சோதி முகத்தின் அழகினைக் கண்டென்றன்
சிந்தை திறைகொடுத்தேன் — அவள்
செந்திரு வென்று பெயர் சொல்லினாள் மற்றும்
அந்தத் தினமுதலா — நெஞ்சம்
ஆரத் தழுவிட வேண்டுகின்றே னம்மா!

6. புன்னகை செய்திடுவாள் — அற்றைப்
போது முழுதும் மகிழ்ந்திருப்பேன் சற்றென்
முன்னின்று பார்த்திடுவாள் — அந்த
மோகத்திலே தலை சுற்றிடுங்காண் பின்னர்
என்ன பிழைகள்கண்டோ — அவள்
என்னைப் புறக்கணித் தேகிடுவா ளங்கு
சின்னமும் பின்னமுமாய் — மனம்
சிந்தி யுளமிக நொந்திடுவே னம்மா!

7. காட்டு வழிகளிலே — மலைக்
காட்சியிலே புனல் வீழ்ச்சியிலே பல
நாட்டுப் புறங்களிலே — நகர்
நண்ணுசில சுடர் மாடத்திலே சில
வேட்டுவர் சார்பினிலே — சில
வீர ரிடத்திலும் வேந்த ரிடத்திலும்
மீட்டும் அவள்வருவாள் — கண்ட
விந்தையிலே இன்ப மேற்கொண்டுபோ மம்மா!

## காளி காதல்

ராகம்: புன்னாகவராளி   தாளம்: திஸ்ர ஏகம்

8. பின்னொர் இராவினிலே — கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு
கன்னி வடிவமென்றே — களி
கொண்டு சற்றே யருகிற் சென்று பார்க்கையில்
அன்னை வடிவமடா! — இவள்
ஆதி பராசக்தி தேவியடா இவள்
இன்னருள் வேண்டுமடா — பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப் போமடா!

9. செல்வங்கள் பொங்கிவரும் — நல்ல
தெள்ளறி வெய்தி நலம்பல சார்ந்திடும்
அல்லும் பகலுமிங்கே — இவை
அத்தனை கோடிப் பொருளினுள்ளே நின்று
வில்லை யசைப்பவளை — இந்த
வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிர்ப்பவளை — நித்தம்
தோத்திரம் பாடித் தொழுதிடுவோமடா!